உ
சிவமயம்



# அமரர். திருமதி. சிவம்மா சுப்பிரமணியம்

அவர்களின்

# நினைவு மலர்

26-07-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திருமதி. சிவம்மா சுப்பிரமணியம்
## அவர்கள்



**மலர்வு**

**1919 - 06 - 16**

**உதிர்வு**

**2003 - 06 - 26**

## திதிவெண்பா

**விண்ணகம் போற்ற நங்கை சிவம்மா**
**மண்ணகம் விட்டே மறைந்த நன்னாள் - நன்னுபுகழ்**
**சுபானு வருட சேர் ஆனிமாத மாலைவேளை**
**பூண்ட கார்த்திகைத் திதியாம் போற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங்கை கூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்குமுருவாக்கும்
ஆதலால் வானோருமானை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்து(ம்) மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலையமர்ந்தாரே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருகிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே புன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை
தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுகக்
பண்ணவர் மலரடி பணிந்து போற்றுவாம்

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். சிவம்மா அவர்களின்
## வாழ்க்கைச் சரிதம்

மாணிக்க தீவாம் ஈழவள நாட்டிலே
காணிக்கை நன்கராம் திருமலையிலே
சைவ வேளாளர் வழிவந்த வேலுப்பிள்ளைக்கும்
சீர்பெறு நன்மனையாள் செல்லநாச்சியார்க்கும்
ஊனமிலா ஆயிரத் தொளாயிரத்து பத்தொன்பதில்
செம்மைசேர் ஆனிமாதம் பதினாறாம் நாளில்
கண்டவரெல்லாம் வியப்புறு வண்ணமாய்
ஒன்பதாவது பிள்ளையாய் சிவம்மா அவதரித்தார்
புள்ளி மானாய் அவர் துள்ளி வந்த வேளை
பள்ளிவளை தேடிய பருவமங்கையாய்
வளரும் மதியம்போல் எழுந்துவரும் நாளில்
கனிவான மொழிபேசி அனைவரையும் கவர்ந்திடுவார்
உற்றார் போற்றி மற்றோரும் வாழ்த்திவர
பூத்துக் குலுங்கும் மணப்பருவம் கண்டார்
கருணை பொங்கும் வீரகத்தியும்
நன் மனையாள் வள்ளிப் பிள்ளையும் ஈன்ற
பருவம் கொண்ட காளை சுப்பிரமணியத்தை
திருமணம் செய்து சீர்பார்த்தார்கள்
கணவனின் பொருவளமறிந்து
நல்லாள் பிள்ளை நின்றூறி
பல்லான் பெரும் செல்வமீட்டி
சொல்லான் அரிய வாழ்வெய்தார்
கற்றவிதம் அறிந்து தன்னிலை தெரிந்து
உற்ற பொழுதும் ஓய்விலாது பாடுபட்டார்
நற்றவம் செய்து நானிலம் போற்ற பிள்ளைகள்
பதினொன்றை பாங்காய்ப் பெற்றெடுத்தார்
குலம் சிறக்க இரத்தினபவன் பின்
தருமபவன், சரவணபவன், ஸ்ரீபவன்
நலம் பெருக பத்மபவன், ஆனந்தபவன்
புகழ் சிறக்க யோகமலர், யோகராணியுடன்
பண்புநலம் பெருக சற்குணபவன், மதியழகன்
சந்தணமாய் வந்துதித்த வனராணியைப் பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைச் செல்வங்கள் மழலை மொழிபேசக்கண்டு
குதூகலித்து வாழ்ந்து வரும் வேளை
காலன் வந்து சரவணபவனை பறித்தெடுத்தான்.
கண்ணீரால் கரைந்தழுதார் பின்னர்
பத்துக் குழந்தைகளையும் அரவணைத்து வளர்த்தெடுத்தார்
கடமை தவறாத தெய்வமவர்
உடமை தம்மைந்தரை உயர்த்த ஏணியானார்
மடமையென மற்றோர் பேசாமல்
திறமையோடு மக்களை சீர் செய்தார்
பத்திரகாளிமேல் பக்தி கொண்டே
ஏழு வயது முதலாய் கௌரிவிரதம் நோற்றார்
வண்ணமாய் வாழ்வு மலர்ந்து வரும் வேளை
கண்ணிலான் இயமராஜன் கருத்திலே எண்ணி
ஆயிரத்தொள்ளாயிரத்து எழுபத்தாறு தனில்
கணவனை கொடிதாய் பறித்தெடுத்தானே
முயற்சியில் சிறிதும் தளராத சிவம்மா
மைந்தரைத் தொழிலிலே சேர்த்துவைத்தார்.
பொருள்வளம் பெருக்க ஸ்ரீபவன், பத்மபவன்
இவர்களோடு சற்குணபவனையும், மதியழகனையும்
பாங்குடனே கனடா அனுப்பி வைத்தார்
பிள்ளைகள் நன்றாய் வாழ்ந்து வரும் போது
காற்றோடு வந்த மாயக்கயிறு ஒன்று
போற்றிய வயது எண்பத்து நான்கில்
மாற்றியது உடலை மண்ணிலே சாய்த்தது
ஆனிமாத இருபத்தாறாம் நாளில்
பாய்ந்தோடும் தேனாறு நின்றது போல்
காய்ந்தாலும் கதிரவன் எறியாதுநின்றது போல்
வாய் நிறைந்த வண்தமிழ் வளராதது போல்
விதியின் கதை முடியும் வேளை கூடிவரவே
காலனை வென்றோர் யார்தான் உளரோவென
உறவினர் அனைவரும் குடும்பமும் கலங்கியே போக
துயில்வது போலவே 'சிவம்மா' இவ்வுலகை மறந்தார்
கார்த்திகை திதியில் இயற்கை வியக்க
விண்ணுலகைச் சிறப்பிக்க பரலோகம் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச்சே யோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உன் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழ சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராயத் தேவராய்ச்
சொல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே தன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவியறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்மார் புலம்பல்

எம்மருமைத் தாயே
நீங்காத நினைவுகளை எமக்களித்து -நீர்
மீளாய்த்துயில் கொள்ள பரலோகம் சென்றீரோ
வேலை முடிந்து வரும் போது -உன்னை
பார்த்துப் பார்த்து மகிழ்ந்து செல்வேனே
பாசமழை பொழிந்து விட்டு மறைந்து சென்றனையோ
வெளிநாட்டில் இருந்து வந்து உயிரோடு உன்னை
பார்க்க நினைத்து வந்த எமக்கு மறைந்த செய்திதந்து எம்மை
ஏமாற்றிச் சென்ற விதம் இதுவோ
பொல்லாத காலன் வந்து கொன்று குவித்தானே.
உறவினரை கண்ணீக் குருதியில் நனையவிட்டு
கெஞ்சியும் வராத்தூரம் சென்றனையோ அம்மா
நீலக்கடல் செங்கடலானதே கோலத்தமிழ் அதிர்ந்ததே
உன்வரவிற்காய் கண்ணீரால் கரைகின்றோம்
விரைந்து எம்முன் வாராயோ.

## மகள்மார் புலம்பல்

பாசமழை காட்டி எம்மை வளர்த்தெடுத்த தாயே
மோசம் செய்து மறைந்த மாயமென்ன
வாழும் காலம்வரை தீராத கவலைதந்து
விண்ணுலகு சென்ற நீதியென்ன
நோயாலே நாம் துடிதுடித்த போதெல்லாம்
கண்ணுறங்காமல் விழித்திருப்பாயே
பிள்ளைகள் மேல் காட்டும் பரிவு கண்டு மகிழ்ந்திருப்போம்
மாண்டு போன செய்தி வந்து வாட்டி வதைக்கிறதே
நொந்தொரு சொல் பேசாத உந்தன் மொழி
வெந்தணலாய் எம்மை உருக்கி அழிக்கிறதே
பேரப்பிள்ளைகளுக்காய் நீர்உருகும் உருக்கமெங்கே
பொல்லாத காலன் வந்து உனதுயிரைக் குடித்தானே
மீண்டுமொரு பிறப்பெடுத்து எமைக்காணமாட்டீரோ
உன் ஆத்மா சாந்திபெற அனுதினமும் இறைஞ்சுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

நெஞ்சார எமையணைத்து நேயமாய் கதைகூறி
மருமக்கள் தன்னை அழகு பார்த்த அன்பு மாமி
உன்னுருவம் காணவெண்ணி வந்த எமக்கு
பூதவுடல் காட்டி மறைந்துபோன நியாயமென்ன.
இருநாள் பொறுத்திருந்தால் உமைக்கண்டு மகிழ்ந்திருப்போம்.
சொல்லாமல் கொள்ளாமல் பரிதவித்துப் போனதெங்கே
மருமக்கள் பயணம் செய்தால் விழித்திருந்து கேட்பாயே
உந்தன் அழகு முகம் காணாமல் துடித்துப்போனோமே
நீகூறும் அறிவுரைகள் அனுதினமும் ஒலிக்கின்றதே.
உன் ஆத்மா சிறப்படைய தெண்டனிட்டு துதிக்கின்றோம்.

## பெறாமக்கள் புலம்பல்

அன்பூட்டி எமை வளர்த்த சின்னம்மா
இவ்வுலகுவிட்டு ஓடி மறைந்ததெங்கே.
எம்மன்னையைக் காண்பது போல்
எந்நாளும் காண்போமே
மீளாத பயணம் செய்ய புறப்பட்ட மாயமென்ன.
மீண்டு வந்து எமை அணைக்க மாட்டாயோ.
பெயர்கூறி அழைத்திடும் போதெல்லாம்
உள்ளம் நெகிழ்ந்து மகிழ்ந்திருப்போமே
அன்பு முகம் தேடி இனிக்காணும் நாள் எதுவோ
உன் ஆத்மா சாந்தி பெற மலர்தூவித் துதிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

நினைக்க நினைக்க இதயம் வெடிக்கிறதே
அம்மம்மா, உயிர்காணாய் கண்கள் பனிக்கிறதே
பிறந்து வந்த நாள் முழுதாய் அன்பு முத்தம் தருவாயே
வருந்தாமல் பிறர் மனங்கள் நடத்துகின்ற உம் குணத்தை
யோசித்து நோக்கும்வேளை இதயங்கள் அழுகிறதே
இறக்கவில்லை அம்மம்மா மௌனம் கலைய எழுந்திடுவாயா
பெருநாட்கள் வரும்போது பரிசில் பல தருவாயே
உந்தன் ஆசை முகம் காண நாம் எங்கே செல்வோம்
மீண்டும் பிறப்பெடுத்து எமைக்காண வாராயோ
பிஞ்சினிலே வளர்த்தெம்மை பிரியமுடன் சோறூட்டி
அஞ்சினிலே கதைகள் பல சொன்ன அம்மம்மா
உந்தன் கதை கேட்க எங்கே நாம் செல்வோம்
தெய்வத்துள் தெய்வமாக அனுதினமும் பிரார்த்திப்போம்
உங்கள் வரவிற்காய் மண்டியிட்டுக் காத்திருப்போம்.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அப்பம்மா உனைக்காண விரைந்து வந்தோமே
இரு நாட்கள் பொறுக்காமல் மறைந்த மாயமென்ன
உன்தன் மடியில் படுத்துறங்க துடித்திருந்தோமே
உன் விழிகள் மூடி துயில் கொண்ட முறை இதுவோ
தென்றலாய் வந்து எமையணைக்க ஓடிவாராயோ
முன்பெல்லாம் வந்தபோது ஓடிவந்து அணைத்தவளே
முகம் காணா பாவிகளாய் துடிதுடித்துப் போனோமே
கண்ணீரைக் குளமாக்கி எங்கே சென்றீரோ
பனிமலர்களை கொண்டு பூஜிக்கின்றோம்
பனிபடர்ந்த நாட்டில் பனி மழையாய் வாராயோ
உந்தன் வருகைக்காய் காலமெல்லாம் காத்திருப்போம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் புலம்பல்

கள்ளமில்லா உன் உருவம் தன்னை
கடைசிவரை ஒருபோதும் மறக்க மாட்டோம்.
பசித்த ஏழைகளுக்காய் மனமிரங்கிப் போவாயே,
கந்தசாமி கோவில்தனில் உமைக்காணும் போதில்
பூரித்து நிற்போமே உறவுமுறைசொல்லி உடன் வருவாயே.
உந்தன் மரணச்செய்தி காற்றாடிபோல் சுழல்கிறதே
கோயில் மணியில் ஓசைகள் ஒருகணம் அடங்கி நின்றதுவே
சொல்லாமல் கொள்ளாமல் எமைப்பிரிந்து சென்றாயோ
உன் நினைவை உரைத்தபடி பூமியிலே வாழ்வோமே.

## பூட்டப்பிள்ளை புலம்பல்

ஆசைப் பாட்டியே
செல்லாத இடம்தேடிச்
சென்றனையோ.
உன்தன் முகம் காண
அடிக்கடி நான் வருவேனே.
உந்தன் பிரிவிற்காய்
கண்ணீரால் நனைகின்றேன்.
மீண்டுமொரு தடவை வந்துதிக்க மாட்டாயா?

## தேற்றம்

தேறு தேறு நீ மனமே சித்தும் அசத்தும் இரண்டதனில்
தேறும் போதே இவ்வுடலும் தெளிவாய் அழியும் அசத்தென்றே
கூறும் பஞ்ச பூதத்தால் கூட்டிய இந்தப் பண்டமது
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும் உயிர்தான் அழிந்திலதே

(கவிதையாக்கம்: திரு.க. யோகானந்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியைகள்

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம்- பிந்தியது எனப்பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையம் என்பது நம்பிக்கை. தாய்தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும்போதும் இல்லாதபோதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக்கிரியைகளின் பலனை சிவாகமங்களும் புராணஇதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தரா என்பது கௌசிகர் வரலாற்றுமூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை 'தென்புலத்தார்' என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும், சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரந் தவறியவராவார். பிதிரர் வருந்தின் பெரும் தீமைகள் நேரும்.

**அபரக்கிரியைகள் வகை:-** இவை தகனக்கிரியை, அத்திசஞ்சயனம்,அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தரக்கிரியை சிரார்த்தக்கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோரே சைவர் என்று சொல்லுந் தகுதி பெற்றவர். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயாவார். அவர்களுக்குரிய உத்திர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிரார்த்தம் குருபூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

மற்றவர்களுக்கு பூதவுடலில் தீட்சை வைத்த பிறகு கிரியைகள் செய்யலாம்.வாழ்நாள் முழுவதும் அசைவ உணவுகளை உண்ணாத சுத்த சைவர்களுக்குப் பூதவுடலிலேயே அந்தியேட்டியும் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மரணக்கிரியைகள்:-** சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக் கிரியையில் மூன்று பகுதிகள் உண்டு. அவையாவன பேரிகையடித்தல்,உடற்சுத்தி, ஆன்ம சுத்தி என்பனவாம்.

**பேரிகையடித்தல்:-** ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்திபண்ணி, மேளத்திலே பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும் போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும். எனவும், பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினத்திற்கும் ஐசுவரியம் உண்டாக வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினத்திற்கும் நன்மை உண்டாக வேண்டுமெனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கின்றேன். சிவபெருமான் அதனை இரட்சிக்க என்பதாம். (இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்.)

**உடற்சுத்தி:-** சிவாச்சாரியார் பந்தலின் நடுவில் சிவகும்பமும், உருத்திரகும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்துச் சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள்நீர், சிவகும்பநீர், ஆகியவகைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து புத்தாடை புனைந்து நீறு சாத்திப் பூச்சூடி பிரணவாசனமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியார் பஞ்ச சுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். கும்பத்திலிருந்த சிவனை உடலின் மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் ஆசனபூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் பஞ்சப்பிரமந்திரங்களைப் பதித்து அதன் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களை தீர்க்க ஆகுதி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வுடலுக்குந் தனக்கும் நாடி சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டு வந்து, உருத்திரனைத் தியாணித்துப் பூரணாகதியுடன் உருத்திரமூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

**சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்:-** பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது.பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்கப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப் பெறும்.

**சுடலை சேர்த்தல்:-** உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்டத்திற்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவசாரமுள்ள ஒருவரே அதனைச் செய்யத்தக்கவராவார்.) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நாலு முழ நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர் பெறும். இச் சிதாத்தானத்தில் அடுக்கபபட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

**தீயிடல் (தகனக்கிரியைகள்):-** கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்குத் தெளித்துக் குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வர். கொள்ளி வைத்தவர் பின் நீர்க்கரையில் நீராடி வீடு செல்வர். தீ இடும்போது "அக்கினிதேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைத்து கொண்டே தீ இட வேண்டும்.

**அத்திசஞ்சயனம் (காடாற்றல்):-** அத்திசஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி- எலும்பு, சஞ்சயனம்- கரைத்தல், இ..து கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள எலும்புகளையும் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள், சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

**நக்னதானம்:-** இது தகனக்கிரியை முடிந்த பின் இறந்தவரின் பசி தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டுக் குடும்பத்தாரால் ஆசாரியாருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

**ஆசௌசம்:-** இதைத் துடக்கு என்று கூறுவதுண்டு. இறந்த ஆத்மாவின் இரத்த உறவு தொடர்புடையோர் அந்த ஆன்மா சாந்தி பெறவேண்டிக் கிரியை செய்து பிரார்த்திக்கும் நாட்கள் ஆசௌசம் எனப்படும். இந் நாட்களில் வேறு சிந்தனைகளின்றி மங்கள் நினைவுகள் தவிர்த்து, தனியாய் அவர் சார்ந்த குடும்பத்தினர் ஆ- ஆன்மா, சௌ- சௌக்கியம், சேஷம் பெற ஒடுங்கி இருக்கும் நாட்கள் (இது ஜனனம், மரணம், தகனம்) என மூவகைக்கும் பொருந்தும். பூமியில் புதிதாய் ஜனனிக்கும் ஒரு ஆன்மாவின் பூமி வாழ் சௌக்கியத்திற்காகவும், ஆசௌசம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது பிராமணர்களுக்கு பதினொரு நாட்களும், இசை வேளாளர்களுக்கு பதினாறு நாட்களுக்கும் முறைப்படி தீட்சை பெற்றோருக்கு இருபத்தொரு நாட்களும் மற்றையோருக்கு முப்பத்தொரு நாட்களுமாய் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

**அந்தியேட்டி:-** இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய- கடைசி நாள், இட்டி- யாகம் இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகின்றது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க் கரையில் நிகழும் குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க் கரையில் நிகழுங் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடாண பூசை**:- (பாஸான பூசை) ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப் பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சில பதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஈன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாம்.

**ஏகோதிஷ்டம்**:- இது அந்தியேட்டி செய்த அடுத்த நாளில் செய்வதாகும். இறந்த ஆத்மாவிற்கு "திருப்தி உண்டாகும் வண்ணம்" சிவ பூசை செய்யும் சிவாச்சாரியார்களைக் கொண்டு, அந்த ஆன்மாவைச் சேரும் பொருட்டு ஏகோதிஷ்டம் ஏக ஒருவரை உத்தஸ்டம் கருதுதல், அதாவது இறந்த ஒருவரைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவது ஏகோதிட்டம் வரிக்கும் அந்தணரைத் தமது இறந்த ஆத்மாவாகக் கருதி கொடுக்கப்படுவது சாப்பாட்டுப் பொருட்கள், உடை, செபமாலை, காலணி, குடை, பொன், பொருள் என அவர் நித்திய கருமங்களுக்கு உபயோகிக்கக் கூடியதாயும் நித்தம் அவர் பூசை செய்யும் போது அந்த நினைவில் அவர் ஆன்ம சாந்திக்கும் ஒரு பிரார்த்தனை செய்யக் கடவர், அதனாலேயே "ஏகோதிஷ்டம்" கொடுப்பவரும் திருப்தியாகக் கொடுக்க வேண்டும். வாங்குபவரும் அந்த ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்க வேண்டும். இருவரும் ஏக ஒருவரை உத்திஸ்டம் கருதி செய்வது எனப்படும்.

**சபிண்டீகரணம்**:- இந்நாளிலேயே நான்கு தேவர் எனக் கூறப்படும் விசுவதேவர் அப்பியாகதர், பிதுர்தேவர், நிமித்தர் என நால்வகைப்படும். தேவருக்கு கொடுக்கம் பூசை உபசாரதானங்களே சபிண்டீகரணம் எனப்படும். இதற்கு அவரவர் வசதிக்கேற்ற இரண்டு அல்லது நான்கு பிராமண சிவாச்சாரியார்களுக்கு முறையான உபசாரங்களோடு உபசரித்து அவர்களின் மந்திர உச்சாடனங்களோடு திருப்திகரமான தானாதிகள் செய்து பிண்டங்களை ஒரு வடிவமாக்கி தண்ணீரில் விடுதல் அல்லது கரைத்து பசு மாட்டிற்கு வைத்தல் உத்தமமாகும். ஒவ்வொரு வர்க்கமாய் பிதுர்வர்க்கம் மூன்று மாத்துரு வர்க்கம்3, நிமித்தர்1, தகப்பன் வழி, தாய்வழி, இறந்தவர் என ஏழு பிண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து வைத்து பூசித்து எல்லாவற்றையும் சேர்த்து பிதிர் தேவர் ஆக்கி விடுதல் சபிண்டீகரணம் ஆகும்.

**மாசிய சிராத்தம்:-** ஆண்டுத் திவசம் முடியும் வரை இறந்த ஆன்மாவானது இறந்த திதியில் தனது இல்லம் நாடும் என்கிற மரபுக்கேற்ப ஒவ்வொரு மாதமும், அந்த ஆன்மா இறந்த திதியிலும் விசேடமாக 45, 180, 360- ம் நாட்களிலும் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து வீட்டிலே ஆன்மாவிற்குப் படையல் வைத்துப் பூஜிப்பது மாசியம் எனப்படும்.

**ஆண்டுத் திவசம்:-** (வருட சிராத்தம்) இந்த சிராத்தமே ஆன்மாவிற்கு ஓரிட ஓய்வு தருவது. அங்குமிங்கும் இடை நடுவாய் அல்லாது, அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம் என முறையாக ஆன்மாவிற்கு மகிழ்ச்சி தரும் கிரியைகள் செய்து, ஆண்டுத் திவசத்தில் ஆன்மா மோட்சம் பெறும் என்பது ஐதீகம். எனவே இத் திவசமும் முற்கூறியவை போல் திருப்திகரமாய் செய்யப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

**வருட சிராத்தம்:-** ஒவ்வொரு வருடமும் இறந்த ஆத்மாவின் திதியில் செய்யப்படுவது இதுவாகும். இதற்குக் கணக்கு இல்லை. எம் உயிருள்ளவரை எம்மால் இயன்றவரை இதைத் தொடர்ந்து செய்வதால் எம்வம்சம் தழைத்தோங்கவும் எமக்கு எமது பிள்ளைகள் கிரியைகள் செய்யாவிடினும் அந்தப் பலாபலன் எமக்குக் கிடைக்கிறது.

**மஹாளயம்:-** ஆவணி மாதத் தேய்பிறை பிரதமை முதல் புரட்டாதி மாத அமாவாசை வரையிலான பதினைந்து அல்லது பதினாறு நாட்கள் பிதுர்களுக்குரிய பிரியமான பண்டதானம், தர்ப்பணம் முதலியன செய்யும் காலமே "மஹாளயம்" எனப்படுகின்றது.

தட்சணாயத்தில் சூர்யன் தெற்கு நோக்கிச் சஞ்சிக்கும் காலம் அதன் நடுப்பாகம் புரட்டாதி மாதம், அதாவது பூமிக்கு நேரே நிற்கும் காலமும் சந்திரன் தென் பகுதிக்கு நேராகவும் நிற்கும் காலமாக அமைவதாலும் இக் காலம் பிதுர்களுக்குப் பிரியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமான காலமாக அமைகின்றது. சில வேளைகளில் வருஷ சிராத்தம் நாம் செய்ய தவறியிருப்பின் செய்ய முடியாத நிலைமைகள் அமைந்து விடினும் அதை இந்த மஹாலய பட்ச நாளில் செய்து கொள்ளலாம்.

**அமாவாசை விரதம்:-** இது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந்த நாளில் "தாமகு" தந்தை பாட்டன், வழியினருக்கும் தர்ப்பணம் செய்து விரத அனுட்டானம் செய்வது மரபு. இந்த அமாவாசை விரதங்களிலே ஆடி மாதத்தில் வரும் அமாவாசை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந் நாளில் தந்தை வழியினர் சிராத்தங்கள் செய்யத் தவறியோர் இந் நாளில் செய்யலாம். பிதுர்களுக்குரிய திசையாகிய தெற்குத்திசை பக்கமாய் சூரிய பகவான் உதயமாகும் காலமும் சந்திரனின் ஆட்சி வீடான கடகராசியும் சூரியன் சஞ்சரிக்கும் காலமும் கொண்ட இந் நாள் பிதுர்களின் பிரிய நாள். எனவே இந்த ஆடிஅமாவாசை புனிதத்துவமும் மகிமையும் நிறைந்த நாளாய் மிளிர்கின்றது.

**பூரண விரதம்:-** இவ் விரதம் ஒவ்வொரு மாதமும் அமாவாசைத் திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந் நாளில் தயாருக்கும் தாய்வழி உறவினருக்கும் விரதம் இருந்து தர்ப்பணம் செய்து அன்னதானம் செய்வது உத்தமம். பௌர்ணமி விரதங்களிலே மிகவும் சிறப்பு வாய்ந்த "சித்ரா பௌர்ணமி" சூரியன் தனது உச்சம் பெற்ற வீடாகிய மேஷராசியில் சஞ்சரிக்கும் காலம் அதே நேரம் மாதுரு காரகன் சந்திரன் 7ம் இடம் சஞ்சரிக்கும் காலம் சூரியன் பிதாகிரகம் சந்திரன் மாதா கிரகம் என்பது ஜோதிட நூல்கள் கூறும் விதி. இந்த இரு கிரகங்களின் சேர்க்கைப் பார்வை பெறும் நாட்கள் பிதுர்களின் பிரிய நாளாகின்றன. எனவேதான் ஆடிஅமாவாசை சித்ராபௌர்ணமி சிறப்புப் பொருந்திய சிராத்த தினங்களாகப் பேணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்

கடந்த 2003.06.26 அன்று எம்மைவிட்டு பிரிந்து சென்று இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் சிவம்மா சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயரினைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர்க்கும், மற்றும் உள்நாட்டிலும், வெளிநாடுகள் பலவற்றிலிருந்தும் தொலைபேசி மூலமாகவும், தந்திகள் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் சபிண்டீகரணக் கிரியைகள் எமது இல்லத்திலும், கனடாவிலும் இடம்பெற்றபோது நேரில் சமுகந்தந்து சிறப்பித்த அனைவருக்கும், குறிப்பாக பல்வேறு வழிகளிலும் உதவிகளையும், ஒத்தாசைகளையும் நல்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
பிள்ளைகள், மருமக்கள்
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

1032, BLIZZARD ROAD,
MISSISAYA,
ONTARIO,
L5 VIT2
CANADA

இல: 101/8 கந்தசாமி கோவில் வீதி,
திருக்கோணமலை,
இலங்கை.
தொ.பே. இல: 026-21807



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சா

**சுப்பிரமணியம் +**

- இரத்தினபவன் + தேவிபுஷ்பம்
  - சுபாஜினி
- தருமபவன் + யோகமலர்
  - ரமணன்
  - ரிஷிபன்
  - ரூபசாந்தன்
- சண்முகபவன் (அமரர்)
- ஸ்ரீபவன் + ஜெயமணி
- பத்மபவன் + சுசி
  - விநோத்
  - பிரவின்
- ஆனந்தபவன் + விஜயகுமாரி
  - கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சாவழி

யம் + **சிவம்மா**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பவன் | யோகமலர் | யோகராணி | சற்குணபவன் | மதியழகன் | வனராணி |
| | + | + | + | + | + |
| மாரி | இந்திரசூரியன் | கலாதரன் | கலாவதி | சுகந்தி | யோகானந்தன் |
| தா | இளங்கோவன் | ராகவன் | கீர்த்தனா | அனுஜன் | சஜீவன் |
| | அகிலன் | அனுஷா | தர்ஷன் | அஜந்தன் | நிதுஷன் |
| | | | | | நர்த்தனா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும்.
எனது படைப்பின் சாராம்சமாகும்"
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org